**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.157/2021 –** P.W.1

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. A.S.M.ஜெய்னுல் அமீதீன் | Father's Name. முகம்மது ஆதம் |
| Village : நாகப்பட்டினம் | Age: 69 |
| Date : 29.06.2026 | தொழில் : -- |

நம்பர்: 94888 31888

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **29th day of June 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamaheshwari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **29th day of June 2026.**

Signature of Interpreter

**( 4 மற்றும் 5ம் எதிரிகள் ஆஜர். 1 மற்றும் 3ம் எதிரிகள் காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டனர்.)**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்போது நெ.31/20, சாலாபள்ளித்தெரு, நாகப்பட்டினம் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். சம்பவ சமயத்தில் வெளிப்பாளையம் காவல் நிலையத்திற்கு எதிரே பப்ளிக் ஆஃபிஸ் ரோட்டில், அல்லாகு அக்பர் என்ற பெயரில் ரெஸ்டாரண்ட் வைத்திருந்தேன்.

கடந்த 13.06.2018 ஆம் தேதி இரவு சுமார் 11.30 மணியளவில், நான் டீ குடிப்பதற்காக வெளிப்பாளையம் பேருந்து நிலையத்திற்குள் சென்றேன். டீ குடித்துவிட்டு வெளியே வரும்பொழுது, அங்கு சந்தில் சுமார் 4, 5 பேர் சேர்ந்து என்னை மறித்தார்கள். ஒரு ஆள் கத்தியை என் கழுத்தில் வைத்து கொன்றுவிடுவேன் என மிரட்டி, கையில் உள்ள செல்போனையும், பாக்கெட்டில் உள்ள பணம் ரூ.200/–ஐயும் பறித்துக்கொண்டார். மேலும் அந்த நபர் என்னைப் பார்த்து ஆட்டுப்பக்கிரியுடைய மகனை கழுத்தறுத்து கொன்றதுபோல, என்னை கழுத்தை அறுத்து கொன்றுவிடுவதாக மிரட்டினார். மேலும் இந்த சம்பவத்தைப் பற்றி யாரிடமும் சொல்லக்கூடாது என்று என்னை மிரட்டிவிட்டு என்னிடமிருந்த செல்போனையும், பணம் ரூ.200/–ஐயும் பறித்துக்கொண்டு சென்றுவிட்டார். நான் அங்கிருந்து வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

மறுநாள் காலை சுமார் 10.00 மணியளவில், வெளிப்பாளையம் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன். தற்போது காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் **அசாஆ.1**. சிறிது காலம் கழித்து என்னிடம் கைப்பற்றப்பட்ட செல்போன் மற்றும் பணம் கண்டுபிடித்துவிட்டதாக போலிசார் எனக்கு தகவல் சொன்னார்கள். அதனடிப்படையில், நீதிமன்றத்தின் மூலம் மனு தாக்கல் செய்து நான் எனது செல்போனை இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றேன். நீண்ட நாட்கள் ஆனதால் அந்த செல்போன் பழுதாகிவிட்டது. அதனால் இன்று வழக்கு விசாரணைக்கு அதனை நீதிமன்றத்திற்கு கொண்டுவரவில்லை.

சம்பவம் இருட்டில் நடந்ததால், என்னை யார் வழிமறித்தார்கள் ? எனது கழுத்தில் யார் கத்தியை வைத்து மிரட்டி, என்னிடம் இருந்த செல்போனையும், பணத்தையும் பறித்தார்கள் ? என்று எனக்கு அடையாளம் தெரியாது. ஆஜர்

எதிரிகளை எனக்கு யார் என்று தெரியாது. நீண்ட நாட்கள் ஆனதால், என்னை மிரட்ட பயன்படுத்திய கத்தியை பார்த்தாலும் அடையாளம் காட்ட இயலாது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள்தரப்பு குறுக்கு விசாரணை**.

நான் கொடுத்ததாக சொல்லப்படும் அசாஆ.1 ஆன புகாரில் கூட என்னிடம் செல்போன் மற்றும் பணம் பறித்ததாக சொல்லப்படும் சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் நபர்களின் பெயர் விவரங்களையோ, அங்க அடையாளங்களையோ, அவர்கள் தெரிந்தவர்களா ? அல்லது தெரியாதவர்களா ? என்றோ நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். என்னிடம் செல்போன் மற்றும் பணம் பறித்ததாக சொல்லப்படும் சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் நபர்கள் யார் என்று தெரியாததால்தான் நான் கொடுத்ததாக சொல்லப்படும் அசாஆ.1 ஆன புகாரிலும் அவர்களைப்பற்றி நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

அசாஆ.1 ஆன புகாரில் உள்ள விவரங்களை நான் எழுதவில்லை என்றும், அதை காவல் நிலையத்தில் யார் எழுதினார்கள் ? என்றால் புகாரினை நான் எழுதவில்லை, அதை யார் எழுதினார்கள் என்று தற்போது ஞாபகம் இல்லை. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்காக சென்றபொழுது, அங்கு ஆஜர் எதிரிகளும் இருந்தார்களா ? என்றால் அதை நான் பார்க்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றும், ஏற்கனவே பழைய குற்ற வழக்குகளில் தொடர்புடைய ஆஜர் எதிரிகளை மீண்டும் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த வேண்டி, கடந்த 14.06.2018 ஆம் தேதி எதிரிகளை வீட்டிலிருந்து நிலையம் அழைத்து வந்து, அதன்பின்னிட்டு நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லி, தவறான புகாரினை காவல்

நிலையத்தில் வைத்து உருவாக்கினார்கள் என்றும், அவ்வாறு உருவாக்கப்பட்ட புகாரில் என்னை நிலையம் வரவழைத்து வெறும் கையெழுத்து மட்டும் வாங்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.29 11:42:15 +0530

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.157/2021 –** P.W.2

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. பரமன் | Father's Name. பாலுசாமி |
| Village : நாகப்பட்டினம் | Age: 55 |
| Date : 29.06.2026 | தொழில் : ஆட்டோ ஓட்டுநர் |

நம்பர்: 93454 71960

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **29th day of June 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamaheshwari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **29th day of June 2026.**

Signature of Interpreter

**( 4 மற்றும் 5ம் எதிரிகள் ஆஜர். 1 மற்றும் 3ம் எதிரிகள் காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டனர்.)**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் நாகப்பட்டினம் வெளிப்பாளையம் பப்ளிக் ஆ:ஃபிஸ் ரோடு என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். வீட்டின் கதவு எண் ஞாபகம் இல்லை. நான் வெளிப்பாளையம் காவல் நிலையம் எதிரே உள்ள நாகப்பட்டினம் பேருந்து நிலையத்தில் ஆட்டோ ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததே இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக அனுமதிக்க வேண்டியதன் அடிப்படையில், வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் **அரசு தரப்பு குறுக்கு விசாரணை**.

போலீசார் என்னை விசாரணை செய்ததாகவும், அவ்வாறு விசாரணை செய்தபோது, கடந்த 13.06.2018 ஆம் தேதி இரவு 11.30 மணியளவில் அசா.1 திரு. ஜெய்னுல் அமீதின் நாகப்பட்டினம் பேருந்து நிலையத்தில் டீ குடிக்க வந்துவிட்டு திரும்ப சென்றபோது, மேற்படி பேருந்து நிலையத்தில் சந்தில் ஆஜர் எதிரிகளும், இறந்துபோன எதிரி மாரியப்பனும் அசா.1றை வழிமறித்து, அவரது கழுத்தில் கத்தியை வைத்து, அவரை அச்சுறுத்தி அவரிடமிருந்து செல்போனையும், பணம் ரூ.200/-ஐயும், பறித்த சம்பவத்தை நான் கண்ணுற்றேன் என்றும் வாக்குமூலம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்டவாறு போலீசார் விசாரணையில் வாக்குமூலம் அளித்துவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அதை மாற்றி தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் ஆட்டோ ஓட்டுவதால், நிறைய வழக்குகளில் நாங்கள் பார்க்காத சம்பவத்தையே, பார்த்ததாக சொல்லும்படி போலீசார் எங்களை சாட்சிகளாக போட்டுவிடுகின்றனர் என சாட்சி தன்னிச்சையாக சாட்சியமளிக்கின்றார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.29 11:42:25 +0530

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.157/2021 –** P.W.3

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. ஆண்டிசாமி | Father's Name. ராமுதேவர் |
| Village : நாகப்பட்டினம் | Age: 47 |
| Date : 29.06.2026 | தொழில் : ஆட்டோ ஓட்டுநர் |

நம்பர்: 95852 56577

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **29th day of June 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamaheshwari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **29th day of June 2026.**

Signature of Interpreter

**( 4 மற்றும் 5ம் எதிரிகள் ஆஜர். 1 மற்றும் 3ம் எதிரிகள் காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டனர்.)**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் நாகப்பட்டினம் வெளிப்பாளையம் பப்ளிக் ஆஃபிஸ் ரோடு என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். வீட்டின் கதவு எண் 75. நான் வெளிப்பாளையம் காவல் நிலையம் எதிரே உள்ள நாகப்பட்டினம் பேருந்து நிலையத்தில் ஆட்டோ ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை யார் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக அனுமதிக்க வேண்டியதன் அடிப்படையில், வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் **அரசு தரப்பு குறுக்கு விசாரணை**.

போலீசார் என்னை விசாரணை செய்ததாகவும், அவ்வாறு விசாரணை செய்தபோது, கடந்த 13.06.2018 ஆம் தேதி இரவு 11.30 மணியளவில், அசா.1 திரு. ஜெய்னுல் அமீதின் நாகப்பட்டினம் பேருந்து நிலையத்தில் டீ குடிக்க வந்துவிட்டு திரும்ப சென்றபோது, மேற்படி பேருந்து நிலையத்தில் சந்தில் ஆஜர் எதிரிகளும், இறந்துபோன எதிரி மாரியப்பனும் அசா.1றை வழிமறித்து, அவரது கழுத்தில் கத்தியை வைத்து, அவரை அச்சுறுத்தி அவரிடமிருந்து செல்போனையும், பணம் ரூ.200/–ஐயும், பறித்த சம்பவத்தை நான் கண்ணுற்றேன் என்றும் வாக்குமூலம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்டவாறு போலீசார் விசாரணையில் வாக்குமூலம் அளித்துவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால், அதை மாற்றி தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.29 11:42:36
+0530

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.157/2021 –** P.W.4

Deposition of witness for Prosecution:

Name : திரு. காசிபிரசாத் Father's Name. செல்வராஜ்

Village : நாகப்பட்டினம் Age: 61

Date : 29.06.2026 தொழில் : கார் ஓட்டுநர்

நம்பர்: 90425 18939

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **29th day of June 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamaheshwari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **29th day of June 2026.**

Signature of Interpreter

**( 4 மற்றும் 5ம் எதிரிகள் ஆஜர். 1 மற்றும் 3ம் எதிரிகள் காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டனர்.)**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் நாகப்பட்டினம், வெளிப்பாளையம், காளியம்மன் கோவில் பின்புறம் குடியிருந்து வருகிறேன். வீட்டின் கதவு எண் 8. நான் நாகப்பட்டினம், வெளிப்பாளையம் காவல் நிலையம் எதிரே உள்ள நாகப்பட்டினம் பேருந்து நிலையத்தில் காசிஸ் சைக்கிள் என்ற பெயரில் சைக்கிள் கடை

வைத்திருந்தேன். தற்போது கார் ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. தற்போது காட்டப்படும் பார்வை மகசரில் முதலில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்தினை எதற்காக, எங்கு, எப்போது போட்டேன் ? என தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. அதில் உள்ள விவரமும் எனக்கு தெரியாது. பார்வை மகசரில் உள்ள அசா.4கின் கையெழுத்து மட்டும் **அசாஆ.2**. போலீசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக அனுமதிக்க வேண்டியதன் அடிப்படையில், வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் **அரசு தரப்பு குறுக்கு விசாரணை**.

போலீசார் என்னை விசாரணை செய்ததாகவும், அவ்வாறு விசாரணை செய்தபோது, கடந்த 13.06.2018 ஆம் தேதி இரவு 11.30 மணியளவில், அசா.1 திரு. ஜெய்னுல் அமீதின் என்பவரிடம், நாகப்பட்டினம் பேருந்து நிலையத்தில் செல்போன் மற்றும் பணம் பறித்த வழக்கு சம்பந்தமாக, கடந்த 14.06.2018 ஆம் தேதி காலை 10.45 மணியளவில், வெளிப்பாளையம் காவல் நிலைய ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அப்போது நானும், ராஜன் என்பவரும் உடனிருந்து, விவரங்கள் அறிந்து பார்வை மகசரில் சாட்சிகளாக கையெழுத்துகள் போட்டுக்கொடுத்தோம் என வாக்குமூலம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்டவாறு போலீசார் விசாரணையில் வாக்குமூலம் அளித்துவிட்டு,

தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அதை மாற்றி தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.29 11:42:49 +0530

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.157/2021 –** P.W.5

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. நாகலிங்கம் | Father's Name. முத்துசாமி |
| Village : நாகப்பட்டினம் | Age: 62 |
| Date : 29.06.2026 | தொழில் : கூலிவேலை |

நம்பர்: 80987 60955

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **29th day of June 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamaheshwari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **29th day of June 2026.**

Signature of Interpreter

**( 4 மற்றும் 5ம் எதிரிகள் ஆஜர். 1 மற்றும் 3ம் எதிரிகள் காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டனர்.)**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் நாகப்பட்டினம், வெளிப்பாளையம், VOC தெரு, சேர்வை தோட்டம், கதவு எண்.27பி என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் காரைக்கால், துறைமுகத்தில் தினக்கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள்

யாரையும் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. தற்போது காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் முதலில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்துக்களை எதற்காக, எங்கு, எப்போது போட்டேன் ? என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. அதில் உள்ள விவரமும் எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அசா.5தின் சாட்சி கையெழுத்து மட்டும் **அசாஆ.3**. கைப்பற்றுதல் மகசரில் உள்ள அசா.5தின் சாட்சி கையெழுத்து மட்டும் **அசாஆ.4**. போலீசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக அனுமதிக்க வேண்டியதன் அடிப்படையில், வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் **அரசு தரப்பு குறுக்கு விசாரணை**.

போலீசார் என்னை விசாரணை செய்ததாகவும், அவ்வாறு விசாரணை செய்தபோது, கடந்த 14.06.2018 ஆம் தேதி பகல் 12.30 மணியளவில், வெளிப்பாளையம் ரயில்வே ஸ்டேசன் அருகில் இவ்வழக்கு எதிரிகள் 5 பேரையும், வெளிப்பாளையம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் மறைந்திருந்து பிடித்த சமயத்தில், நானும், முகம்மது ரபீக் என்பவரும் உடனிருந்ததாகவும், அப்போது ஆஜர் 1ம் எதிரி அருண்குமார் (எ) அருண் தன்னிச்சையாக இவ்வழக்கு சம்பவத்தில் இதர எதிரிகளுடன் சேர்ந்து ஈடுபட்ட குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும், அதனடிப்படையில் அவர் ஆஜர் செய்த செல்போன் ஒன்றையும், அருவாள் ஒன்றையும், ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், அப்போது நாங்கள் உடனிருந்து ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகளாக

கையெழுத்துக்கள் போட்டதாகவும், வாக்குமூலம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்டவாறு போலீசார் விசாரணையில் வாக்குமூலம் அளித்துவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அதை மாற்றி தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.29 11:42:59 +0530